அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பொங்கல் போனஸ்: முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜன. 3– தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்க ரூ.163.81 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை, ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இதன்படி இந்த ஆண்டு வருகிற 14ந்தேதி தைப்பொங்கல் கொண்டாடப்பட உள்ளது.

பொங்கலை முன்னிட்டு தமிழக அரசு ஊழியர்களுக்கு மிகை ஊதியம் என்ற போனஸ் தொகையை அரசு ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான பொங்கல் போனஸ் தொடர்பான முக்கிய அறிவிப்பை தமிழக அரசு நேற்று வெளியிட்டது.

'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு 2023–2024 ம் ஆண்டுக்கான பொங்கல் பரிசு வழங்க ரூ.163.81 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செயல்படுத்தி வரும், நாட்டிற்கே வழிகாட்டக்கூடிய பல முன்னோடி நலத்திட்டங்களை கடைக்கோடித் தமிழருக்கும் கொண்டு சேர்க்க அயராது உழைத்திடும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 2023 – 2024ம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசை வழங்க ரூ.163.81 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.

★ 'சி' மற்றும் 'டி' பிரிவை சேர்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3 ஆயிரம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

★ தொகுப்பூதியம், சிறப்புக் கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 2023–2024ம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்து, சில்லரை செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஆயிரம் ரூபாய் சிறப்பு போனஸ் வழங்கப்படும்.

★ 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கும் ரூ.500 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம், 4 லட்சம் பேர் பயன் அடைவார்கள் என்று நிதித்துறை வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.

கல்வி நிதி கொடுக்க மறுப்பு; தேசிய கல்விக்கொள்கையை ஏற்க மத்திய அரசு அழுத்தம்: அமைச்சர் அன்பில் மகேஸ் குற்றச்சாட்டு

சென்னை, ஜன.3 கல்வி நிதியை கொடுக்காமல் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மத்திய அரசு மறைமுகமாக அழுத்தம் கொடுப்பதாக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

சமக்ர சிக்சா அபியான் திட்டம் மூலம் மத்திய அரசின் நிதியை பெற நம்முடைய கொள்கையை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னார்.

இன்றைக்கும் அந்த திட்டத்தின் கீழ் சம்பளம் பெற்று வரும் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர், ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு ரூ.500 கோடியை மாநில அரசு வழங்கி வருகிறது.

மாநில பட்டியலுக்கு கல்வியை கொடுத்து விடுங்கள் என்று மத்திய அரசிடம் கேட்கிறோம். எங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும்? என்பது எங்களுக்கு தெரியும்.

மத்திய அரசு ஒரு விஷயத்தை (தேசிய கல்விக் கொள்கையை) ஏற்றுக்கொண்டால்தான் நிதியை ஒதுக்குவேன் என மிரட்டுகிறது. கொள்கை ரீதியாக நாம் வலிமையாக இருக்கிறோம். அதை விட்டுக்கொடுக்கப்போவது இல்லை. நிதி என்று வரும்போது, அதில் நம்முடைய கல்வி சார்ந்த திட்டங்கள் எதுவும் தடைபடாமல் இருக்க மாநில அரசு அதை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து இருக்கிறது.

தேசிய கல்விக் கொள்கையை மற்ற மாநில அரசுகள் ஏற்றுக்கொண்டு விட்டன. நீங்களும் கையெழுத்து போட்டால் என்ன? என மத்திய அரசு இன்னமும் மறைமுகமாக அழுத்தம் கொடுத்து கொண்டுதான் இருக்கிறது. இதுவரை மாநில அரசு அடிபணியவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. நம் பிள்ளைகளுக்கு எது தேவை? என்பதை அவர்களைவிட நமக்குதான் தெரியும்.

ரூ.44 ஆயிரம் கோடி என்ன ஆனது? என்று கேட்பவர்களுக்கு, இன்னும் கொஞ்ச நாள் காத்திருங்கள். மானியக்கோரிக்கையின் போது என்னென்ன திட்டங்கள் செய்து இருக்கிறோம் என்று சொல்கிறோம். களத்தில் இறங்கி வேலை பார்த்தால்தான் அதன் கஷ்டம் தெரியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த ஆண்டு ரூ.1,365 கோடி உண்டியல் காணிக்கை

திருமலை, ஜன.3– திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த ஆண்டில் ரூ.1,365 கோடி உண்டியல் காணிக்கையாக கிடைத்துள்ளது.

திருப்பதி ஏழுமலையான்கோவிலில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். முடி காணிக்கையும் செலுத்துகின்றனர். சாமி தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் உண்டியல்களில் காணிக்கை செலுத்துகின்றனர்.

கடந்த ஆண்டு (2024) திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்த பக்தர்கள் எண்ணிக்கை, முடி காணிக்கை செலுத்தியவர்கள், உண்டியல்காணிக்கை ஆகிய விவரங்களை தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது. அதன்படி கடந்த ஆண்டு 2 கோடியே 55 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். 99 லட்சம் பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தி இருக்கிறார்கள்.

உண்டியல் காணிக்கையாக ரூ.1,365 கோடி கிடைத்துள்ளது. கொரோனா காலத்துக்கு முன்பு ஒரு நாளைக்கு 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களும், கொரோனா தொற்று காலத்துக்கு பிறகு தினமும் சுமார் 70 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர்.

அதேபோன்று 6 கோடி பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளதாகவும், 12.14 கோடி லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். வைகுண்ட ஏகாதசி, பிரம்மோற்சவம் போன்ற பிரசித்தி பெற்ற விழாக்களில், கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அப்போது உண்டியல் மூலம் பெறப்படும் காணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

விற்பனை அறிவிப்பு

இஏபி இன்பிராஸ்டிரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பில் உள்ளது)

CIN : U45205TN2011PTC081758

திவால்நிலை மற்றும் நொடித்தல் தொகுப்பு, 2016–ன் கீழ் மின்னணு – ஏலம்

கார்ப்பரேட் கடனாளியான இஏபி இன்பிராஸ்டிரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் (கலைப்பில் உள்ளது) (''கார்ப்பரேட் கடனாளி'') சொத்துக்கள் திவால்நிலை மற்றும் நொடித்தல் தொகுப்பு, 2016–ன் (கலைப்பு நடைமுறை) அட்டவணை I மற்றும் விதிகள் 32(b)–ன்படி https://bankauctions.in என்ற மின்னணு–ஏல இணையதளம் மூலம் மொத்த அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	விவரங்கள்	விவரங்கள்
1	வருங்கால ஏலதாரர் தகுதி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி (பொது அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து குறைந்தது பதினான்கு நாட்கள்)	17.01.2025 அன்று 4.00 மணி வரை
2	மின்னணு–ஏலத் தேதி மற்றும் நேரம்	29.01.2025 காலை 11.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்)

பிளாக் எண்.	சொத்துகள் விவரம்	ரிசர்வ் விலை	டேவணித் தொகை டெபாசிட்	ஏல அதிகரிப்பு மதிப்பு
A	மேக்லி டிரக், மினி டிரக் & மினி எக்ஸ்காவேட்டர் மொத்த விற்பனையில் உள்ளது. (சொத்துகள் தேதிமைத்த நிலையில் உள்ளன)	ரூ.3.00 லட்சம்	27 ஜனவரி 2025 அன்று மாலை 5.00 மணிக்குள் ரூ.30000/–	ரூ.10,000

1. மின்னணு–ஏலம் மூலம் ''உள்ளது உள்ளபடி, எப்படி உள்ளதோ அப்படியே, எந்தவித மாற்றமும் இல்லாமல்'' அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் மூலம் எந்த வகையான உத்தரவாதங்களும் இழப்பீடுகளும் இல்லாமல் விற்பனை செய்யப்படுகிறது.
2. மின்னணு–ஏல சேவை வழங்குனர் மெசர்ஸ் 4 ஃபளேஷர்: https://bankauctions.in, மின்னணு–ஏல முகவர் சாப்பக தொடர்பு கொள்ள வேண்டிய நபர் திரு. தினேஷ்: (4 ஃபளேஷர்), dinesh@bankauctions.in & info@bankauctions.in, மொபைல் எண். +91 8142000735 & 8142000066.
3. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு–ஏல இணையதளம் https://bankauctions.in–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மின்னணு–ஏல நடைமுறை ஆவணங்களில் உள்ள தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கட்டாயமாக படித்து ஒப்புக்கொண்ட பிறகு பங்கேற்க வேண்டும்.

ஒப்பம்/– சந்திரசேகர் சாகுதூர்

M/s. இஏபி இன்பிராஸ்டிரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் கலைப்பு அலுவலர்

IBBI பதிவு எண்: IBBI/IPA-001/IP-P00960/2017-18/11581

மின்னஞ்சல்: liquidatorepp@gmail.com

F4&F5, முதல் தளம், எண்.333/17, எஸ்விபி சலிமா ஆர்கேட் வளாகம், ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை 600 024, தமிழ்நாடு.

தேதி : 3 ஜனவரி 2025, இடம்: சென்னை

பொது அறிவிப்பு

இதனால் பொது மக்களின் கவனத்திற்கு அறிவிப்பது என்னவென்றால், சென்னை–600 037, முகப்பேர் மேற்கு, 3வது பிளாக், முதல் தளம், எண்.3/246 என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.பத்மநாபன் அவர்களின் மனைவி திருமதி.ப.பத்மாவதி என்பவர் வட சென்னை பதிவு மாவட்டம், ரெட்ஹில்ஸ் உப–பதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், எண்.15, பொத்தூர் கிராமம், எண்.2115, பட்டாவில் தாக்கலாகி வரும் சர்வே எண்.96 பார்ட் மற்றும் 97 பார்ட்–ல் அடங்கிய "ஸ்ரீ சாய் சக்தி நகர் அனெக்ஸ்" என்ற லேஅவுட்டில் மனை எண்.154க்கு 600 சதுரடி கொண்ட சொத்திற்கு பூரண உரிமையாளர் ஆவார். இதனால் அறிவிப்பது யாதெனில் திருமதி.ப.பத்மாவதி கிரையம் பெற்ற 10.07.2015 தேதியிட்ட சென்னை ரெட்ஹில்ஸ் சார் பதிவாளர் அலுவலகத்தில் 6650/2015 என்ற எண்ணாக பதியப்பட்ட அசல் ஆவணம் காணாமல் போய்விட்டது. மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்து சம்மந்தமாக யாரேனும் உரிமை கோரினால் அவற்றை எனது விலாசத்தில் 15 தினங்களுக்குள் தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தவறும் பட்சத்தில் மேற்படி சொத்தை உரிமைகோர உரிமை கிடையாது என்று அறிவிக்கப்படுகிறது.

'Hussain Plaza'
348/160, Thambu Chetty Street
Parrys, Chennai - 600 001
Cell No.9840876997.

K.BALA SARAVANAN
Advocate

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி54 & சி55, 4 திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032

மின்–ஏல விற்பனை அறிவிப்பு (மின்–ஏலம் மூலம் மட்டுமே விற்பனை)

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் அசையா சொத்துக்கள்

மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பனை குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு

காலம் (ஏ)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன்தாரரிடம் காலம் (சி)ல் விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள /சார்ஜ் செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் காலம் (டி)யில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக ஆக்கப்பூர்வமான உடைமையாக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே", "உள்ளது போல்" & "எப்படி இருந்தாலும்" விற்கப்படும்:

கடன்தாரர்/அடமானம்தாரர் (கள்)/ சட்டப்பூர்வ வாரிசு, சட்டப் பிரதிநிதிகள் (தெரிந்தவர் அல்லது தெரியாதவர்), நிறைவேற்றுபவர் (கள்), நிர்வாகி (கள்), வாரிசு (கள்) மற்றும் அந்தந்த கடன்தாரர்கள் (கள்)/அடமானதாரர்(கள்) (இறந்ததிலிருந்து) ஆகியோரின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 9(1)ன் கீழ் காலம் (ஏ)ல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பனி லிமிடெட்டின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in

வ எண்	(ஏ)	(பி)	(சி)	(டி)	(இ & எப்)	(ஜி)
	கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்கள்	மீட்க வேண்டிய பாக்கி (ஓ/எஸ்) (ஈடுபெற்ற கடன்கள்)	அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம்	சுவாதீன வகை	குறைந்தபட்ச விலை (ரூபாயில்) முன்வைப்புத் தொகை (ரூ.)	ஏலத்தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண். HL23NUG000085641 1) திரு/திருமதி அப்துல் காதர் 2) திரு/திருமதி தஹ்ஸீன் பாத்திமா இருவரது வசிப்பிடம்: எண். 45, சேகர் ராசா ஹைதர் தெரு மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, ஸ்ரீனிவாசா ஹோட்டல், சென்னை600 002; மேலும்: மனை எண். 6, பழைய எண். 128, 99 மற்றும் 87, புதிய எண். 1, பிளாட் எண். 51, இரண்டாவது தளம், பாலாஜி நகர், 1வது தெரு, அனகாபுத்தூர் கிராமம், பல்லாவரம், செங்கல்பட்டு, தமிழ்நாடு 600 070.	27.12.2024 அன்று நிலுவை தொகை ரூ.39,33,993/– (ரூபாய் முப்பத் தொன்பது லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று மூன்று மட்டும்)	அட்டவணை A: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். காலி வீட்டு மனை, மனை எண். 6, 2727 சதுர அடி நிலத்தில் 2057 சதுர அடி நிலம், சர்வே எண். 65/3A& 66/1, பட்டா எஸ். எண். 65/29A இன் படி பட்டா எண். 1277, பழைய எண். 128, 99 & 87, புதிய எண். 1, அனகாபுத்தூர் கிராமம், பாலாஜி நகர், 1வது தெரு, ஆலந்தூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது பல்லாவரம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் சென்னை தெற்கு பதிவு மாவட்டம், பம்மல் சார் பதிவு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி எல்லையில் உள்ளது. எல்லைகள் : * வடக்கு: மனை எண். 7 & மனை எண். 6ன் மீதமுள்ள நிலம்; * தெற்கு : சர்வே எண். 65/3B; * கிழக்கு : 20 அடி சாலை மற்றும் டி.பாஸ்கரின் காலி நிலம்; * மேற்கு: மனை எண். 5. அனைத்தும் சேர்த்து 2057 சதுர அடி. அட்டவணை B: 2057 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 500 சதுர அடி. அட்டவணை A-ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் உரிமை.	ஆக்கப் பூர்வ சுவாதீனம்	ரூ.46,35,000/– (ரூபாய் நாற்பத்து ஆறு லட்சத்து முப்பத்தைந் தாயிரம் மட்டும்) ரூ.4,63,500/– (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்து மூன்றாயித்து ஐநூறு மட்டும்)	20.01.2025 அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)

* ஆய்வு தேதி மற்றும் நேரம் : 16.01.2025 அன்று காலை 11.00 மணி முதல் 4.00 மணி வரை
* குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/–
* ஏலம் / இளம்டி / கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தலுக்கான கடைசி தேதி : 17.01.2025 அன்று மாலை 5.00 மணிவரை

* பணம் செலுத்தும் தேதி வரை மற்றும் / அல்லது அது திரும்பப் பெறும் காலம் வரை கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருந்தக்கூடிய கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவுகள், கட்டணங்கள் முதலியன.

சொத்தை ஆய்வு செய்வது தொடர்பான எந்த உதவிக்கும், அல்லது ஏல ஆவணத்தைப் பெறுவதற்கும் மற்றும் வேறு ஏதேனும் கேள்விகளுக்கும், திரு. முரளி அவர்களை அவரது மொபைல் எண். 8939998886 & மின்னஞ்சல்: muralimr@chola.murugappa.com/திரு. முகமது அப்துல் குவாய் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனியின் அதிகாரி, மொபைல் எண். 7305990872 அவர்களை அணுகலாம். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த வரையில் மேலே உள்ள அசையா சொத்துக்கள் / ஈடுபெற்ற சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

தேதி : 02.01.2025
இடம்: காஞ்சிபுரம், தமிழ்நாடு

★ தெலுங்கானா ரூ.402 கோடி ★ ஆந்திரா ரூ.328 கோடி
★ கர்நாடகா ரூ.308 கோடி ★ புதுச்சேரி ரூ.50 கோடி

தமிழ்நாட்டில் புத்தாண்டு தினத்தில் ரூ.430 கோடிக்கு மது விற்பனை

தென்னிந்தியாவில் முதலிடம் பிடித்து சாதனை

சென்னை, ஜன.3– தமிழ்நாட்டில் புத்தாண்டில் ரூ.430 கோடிக்கு மது விற்பனை ஆகியுள்ளது. இதன்மூலம் அண்டை மாநிலங்களை பின்னுக்கு தள்ளி தென்னிந்தியாவில் முதலிடம் பிடித்து தமிழகம் சாதனை

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் 4,829 டாஸ்மாக் மதுக்கடைகள் உள்ளன. இந்த கடைகளுடன் இணைந்த நிலையில் 2,919 மது அருந்தும் பார்களும் இருக்கின்றன. டாஸ்மாக் மதுக்கடைகளில் தினமும் சராசரியாக ரூ.150 கோடிக்கும், வார இறுதி நாட்களில் ரூ.200 கோடிக்கும், பண்டிகை காலங்களில் ரூ.250 கோடிக்கும் மது விற்பனை நடைபெறுகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டு புத்தாண்டு தினத்தில், டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 1ந்தேதிகளில் 2 நாட்கள் ரூ.400 கோடிக்கு மது விற்பனை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதையும் தாண்டி மது விற்பனை நடைபெற்றுள்ளதாக தெரிகிறது.

38 மாவட்டங்களில் உள்ள மாவட்ட மேலாளர்கள் அந்தந்த பகுதிகளில் மது விற்பனை நிலவரத்தை தெரிவித்த நிலையில், சென்னை, திருச்சி, சேலம், மதுரை, கோவை ஆகிய 5 மண்டல மேலாளர்கள் விற்பனை விவரத்தை வெளியிடவில்லை. இதேபோல், சென்னையில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் இருந்தும் புத்தாண்டு மது விற்பனை தொடர்பாக எந்த தகவலும் வெளியாகவில்லை.

இதுகுறித்து, டாஸ்மாக் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, துறையின் அமைச்சர் (செந்தில் பாலாஜி) புத்தாண்டு மது விற்பனை தொடர்பாக எந்தவித தகவலையும் வெளியிட்டுவிடக்கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஆனாலும், டிசம்பர் 31, ஜனவரி 1ந்தேதிகளில் சுமார் ரூ.430 கோடிக்கு மது விற்பனை நடைபெற்று இருப்பதாக கூறப்படுகிறது. அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது புத்தாண்டு மது விற்பனையில் தமிழ்நாடே முதலிடம் பிடித்துள்ளது. அதாவது, தெலுங்கானாவில் ரூ.402 கோடிக்கும், ஆந்திராவில் ரூ.328 கோடிக்கும், கர்நாடகாவில் ரூ.308 கோடிக்கும், கேரளாவில் ரூ.108 கோடிக்கும் (டிசம்பர் 31 ந்தேதி மட்டும்), புதுச்சேரியில் ரூ.50 கோடிக்கும் மது விற்பனை நடந்துள்ளது.

தமிழ்நாட்டில் டாஸ்மாக் மது விற்பனை மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.45,855 கோடி வருவாய் கிடைக்கிறது.

'நீட்' தேர்வு; நிபுணர் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக செயல்படுத்துவோம்: சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு உறுதி

புதுடெல்லி, ஜன.3– மருத்துவப் படிப்புக்கான, 'நீட்' தேர்வு நடைமுறை தொடர்பாக ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக செயல்படுத்துவோம்' என, மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் உறுதி அளித்தது.

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்காக கடந்த ஆண்டு மே மாதம் 'நீட்' தேர்வு நடத்தப்பட்டது. தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.) தேர்வு நடத்தியது.

அந்த தேர்வுக்கான வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததாகவும், நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு கருணை மதிப்பெண் அளிக்கப்பட்டதாகவும், மாணவர்களுக்கு தவறான வினாத்தாள் அளிக்கப்பட்டதாகவும் புகார்கள் எழுந்தன. தேர்வை ரத்து செய்துவிட்டு, மறுதேர்வு நடத்தக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அம்மனுக்களை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, திட்டமிட்ட வினாத்தாள் கசிவோ, முறைகேடோ நடந்ததற்கு முகாந்திரம் இல்லை என்று கூறி, நீட் தேர்வை ரத்து செய்ய மறுத்து விட்டது.

அதே சமயத்தில், நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய முன்னாள் தலைவர் கே.ராதாகிருஷ்ணன் தலைமையில் 7 பேர் கொண்ட நிபுணர் குழுவை மத்திய அரசு அமைத்திருந்தது.

அக்குழு, நீட் தேர்வை வெளிப்படை தன்மையுடன், முறைகேடு இல்லாமல் நடத்து வதற்கான தேர்வு சீர்திருத்தங்களை பரிந்துரைக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. தேர்வு பாதுகாப்பு, தொழில்நுட்ப முன்னேற்றம், மாணவர்களுக்கு மனநல ஆலோசனை, தேசிய தேர்வு முகமை ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பது ஆகியவை பற்றியும் ஆய்வு செய்து பரிந்துரைக்குமாறு உத்தரவிட்டது.

7 பேர் கொண்ட நிபுணர் குழுவின் பதவிக்காலத்தை கடந்த அக்டோபர் 21ந் தேதி சுப்ரீம் கோர்ட்டு நீட்டித்தது.

இதற்கிடையே, இவ்வழக்கு சுப்ரீம் கோர்ட்டில், நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான துஷார் மேத்தா கூறியதாவது:

மத்திய அரசு அமைத்த நிபுணர் குழு, தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. நிபுணர் குழு பரிந்துரைத்த அனைத்து சீர்திருத்த நடவடிக்கைகளையும் மத்திய அரசு அமல்படுத்தும். வழக்கை 6 மாதங்கள் ஒத்திவைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அதற்கு நீதிபதிகள், ''வழக்கு 3 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. ஏப்ரல் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்'' என்று கூறினர்.

UNITY Small Finance Bank

யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : சென்ட்ரம் ஹவுஸ், வித்யாநகரி மார்க், கலினா, சாந்தாகுரூஸ் (கி) மும்பை 40098

அடையாள சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துகளுக்கு) விதி 8(1)ஐ பார்க்க

யூனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/உடன்கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள்/உடன்கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002